# ★ பள்ளிச் சிருர்கள் நடத்திய எழுச்சிப் பேரணி


விலை ரூபா 6.00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 12 இதழ் 237

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 29 - 09 - 1995


(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா படையினர் தமிழ் மாணவர்கள் மீது மேற்கொள்ளும் கண்மூடித் தனமான தாக்குதல்களை கண்டித்து நேற்று குடாநாட்டில் உள்ள பாடசாலை சிறுர்கள் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடாத்தினர்கள் கோட்ட மட்டத்தில் நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஆரம்ப பாடசாலைகளை சேர்ந்த ஆறும் ஆண்டுக்கு உட்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.

பேரணி நேற்று காலை 9-00

(6ம் பக்கம் பார்க்க)

## இராணுவ செய்தி
## தணிக்கை நீக்கப்படும்

[கொழும்பு]

இராணுவத்துறை செய்திகள் மீதான தணிக்கை சட்டத்தை விரைவில நீக்கிவிட அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சருமான தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர்களுடன் கலந்துரையாடி ஒரு உடன்பாட்டிற் குவந்தபின் தணிக்கைச் சட்டம் நீக்கப்படுமென வும் அவர் மேலும் தெரிவித்தார்

(5ம் பக்கம் பார்க்க

## படகு சேவை இன்று இல்லை

(யாழ்ப்பாணம்)

கிளாலி- பூநகரி படகு சேவை இன்று வெள்ளிக்கிழமை மட்டும் நடைபெறமாட்டாதென விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் தெரிவித்துள்ளனர். சி

## ★ கல்விக் கூடங்கள் மீதான

# அரசின் அராஜகங்களைகண்டித்து

# இன்று ஆர்ப்பாட்டப் பேரணி

## பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

வடக்கு-கிழக்கில் அரசபடைகள் பாடசாலை மாணவர்கள் மீதும் கல்விக் கூடங்கள் மீதும் மேற்கொண்டு வரும் மிகக் கொடூரமான தாக்குதல்களை கண்டித்தும் இலங்கை அரசின் இந்த நடவடிக்கைகளை சர்வதேச சமூகத்தின் முன் கொண்டுவரும் முகமாகவும் இன்று காலை 10 மணிக்கு யாழ் நகரில் மாபெரும் கண்டனப் பேரணி நடைபெறவுள்ளது.

[6-ம் பக்கம் பார்க்க]

## பேரணி ஒழுங்கமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் இன்று நடைபெறும் மாபெரும் எழுச்சிப் பேரணியில் பங்கு பற்றுவோர் விபரமும் பேரணிஒழுங்கமைப்பும் வருமாறு;

வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதகுருமார், கல்விச் சமூகம், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழகத்தினர், தனியார் கல்வி நிறுவனங்கள், கூட்டுறவாளர்கள், வணிகர் கழகங்கள். வணிக ஊழியர் சங்கங்கள், தொழிற் சங்கங்கள்' அரச

(5ம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் புலிகள் தாக்குதல்
## 4 ஊர்காவல் படையினர் பலி

(அம்பாறை)

அம்பாறையில் ஊர்காவல் படையினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட தாக்குதலில் அதிகாரி உட்பட 4 ஊர்காவல் படையினர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டனர்.

அம்பாறை ஊனுவசிங்கள குடியேற்ற கிராமத்திலுள்ள பொலிஸ் நிலையத்திலிருந்து 1000யார் தொலைவில் வைத்து இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

(5ம் பக்கம் பார்க்க)

## விமானம் மூலம்
## சந்திரிகாவுக்கு பாதுகாப்பு'

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா கடந்த 26ம் திகதி மஹர சாலையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட நேரம் விமானங்கள் பாதுகாப்பு கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தன என்று 'வெரித்தாஸ்' சிங்கள சேவை தெரிவித்தது.

ஆனால் அன்று காலை ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினரான

(5ம் பக்கம் பார்க்க)

## வட-கிழக்கில் கடமையாற்ற
## 191 தமிழ் டாக்டர்கள் மறுப்பு

(கொழும்பு)

வடக்கு- கிழக்கில் பணியாற்ற 191 தமிழ் டாக்டர்கள் மறுத்து விட்டதால் இப்பகுதி ஆஸ்பத்திரிகளில் டாக்டர்களுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக சுகாதர அமைச்சு தெரிவித்துள்ளது.

பல்கலைக் கழகங்களிலிருந்து பயிற்சியை முடித்துக்கொண்டு புதிதாக வெளியேறிய 191 தமிழ் டாக்டர்களை வடக்கு-கிழக்கு பகுதியில் நியமனம்

(5ம் பக்கம் பார்க்க)

## விமானத் தாக்குதல்
## வடக்கில் தொடருமாம்

(கொழும்பு)

வடக்கில் விடுதலைப் புலிகளின் தளங்கள் மற்றும் கடல் தளங்கள் மீது விமானப்படையினர் தொடர்ந்து விமானத் தாக்குதல் நடாத்துவர் என இராணுவ உயர் அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

வடபகுதியில் அரசபடைகள் நடாத்தும் தாக்குதல்களில் பொதுமக்கள் தாக்கப்படுவது குறித்து பத்திரிகையாளர்கள் கேட்டபோதே அந்த அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார். க-சி



அரச படைகள் கல்விக் கூடங்கள் மீது மேற்கொண்டு வரும் கொடூரத் தாக்குதல்களைக் கண்டித்து நேற்று யாழ். நகரில் பள்ளிச் சிறுர்கள் நடாத்திய பேரணியின் முக்கிய கட்டங்களை படங்களில் காணலாம்.

படங்கள்: 'தேவா'

## வரி விளம்பரம்

### நாய்க்குட்டி விற்பனைக்கு

அல்சேஷன் டோமன் இரண்டிற்கும் பிறந்த மூன்று மாதம் நிரம்பிய ஆண் நாய்க்குட்டி. சுத்தமான கறுப்பு தொடர்பு: செ. ஆனந்தன், "திஸ்ய தர்சன்", தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (சி-1684)

### எரு விற்பனைக்கு

மாட்டெரு விற்பனைக்கு உண்டு. 30-09 95ம் திகதிக்கு முன் கீழ்க்காணு விலாசத்தில் பார்வையிட்டு கூறுவிலையைச் சமர்ப்பிக்கவும். பொது முகாமையாளர். யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ. து), திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (ஏ-5340)

### பாலர் கற்கை நெறி

நவீன பாலர் கல்வித்துறையில் அனுபவம் மிக்க முன்னணி ஆசிரியரின் நேரடி வழிநடத்தலில் பல உதவி ஆசிரியரின் உதவியுடன் முன் எடுத்துச் செல்லப்பட இருக்கும் இக் கற்கைநெறியில் தங்கள் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ள முன்னதாகவே தொடர்பு கொள்ளுங்கள் ஆரம்பம்: 03-10-95 பாரதி பாலர்கழகம் இலங்கை வங்கி வீதி, சாவகச்சேரி (சி-1683)

### பலவித பொருட்கள்

சகலவிதமான துவிச்சக்கர வண்டிகளும், உதிரிப்பாகங்களும், சிற்றிசன், சீக்கோ, கஷியோ கைக்கடிகாரங்கள், சுவர், மேசை மணிக்கூடுகள், சுடுதண்ணீர்ப் போத்தல், சகலவிதமானரோசிலைற் விளையாட்டுப் பொருட்கள் (Sport Goods) சகாய விலையில் பெற்றுக்கொள்ள: புதிய நகர பல்பொருள் வணிக நிலையம் (நியூ சிற்றி றேடர்ஸ்), 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ஏ-5244)

### விசேஷ அன்ரனு

ரூபவாஹினி மட்றும் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு விசேஷ TV அன்ரனு பொருத்துதல், பழுது பார்த்தல் TV செட் றேடியோ மணிக்கூடுகளை திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டீலக்ஸ் வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284. ஸ்ரான்லி வீதி, (ஆரியகுளம் சந்தி) யாழ்ப்பாணம் கிளை கண்டி வீதி, சாவகச்சேரி. (எ-5319)

### எதிர்ச்சக்தி தினம் பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய எதிர்ச்சக்தி தினம் சம்பந்தமாக, மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமையாற்றும் சகல வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று 29 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலையில் மேல் மாடியில் நடைபெறும். இப்பயிற்சி வகுப்பில் சகல வெளிக்கள உத்தியோகத்தர்களும் தவறாது கலந்து கொள்ளும்வண்ணம் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பொறுப்பதிகாரி திரு. மகாதேவன் கேட்டுள்ளார். -ரி

# உலகத் தமிழ் பண்பாட்டு மாநாடு கனடாவில் நடைபெறவுள்ளது

(ரொறன்ரோ)

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் 6-வது மாநாடு கனடாவில் அடுத்த வருடம் ஆகஸ்ட் 24-ம், 25-ம், 26-ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டையொட்டி, கவிதை, கட்டுரை உட்பட பல போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மேற்படி மாநாட்டில் கட்டுரைகள் வாசிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறுகிய காலத்தில் தமிழை கற்பது எப்படி, உலகத் தமிழரை ஒன்று சேர்ப்பது, தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழ்ப் பண்பாட்டைப் பேணுவது, ஒருபிடி தமிழ் மண், தமிழ்த் தேசியத்தின் தோற்றம், வளர்ச்சி, எதிர்காலம், கனடாவில் தமிழ்மொழி-கலை கலாசாரம் பண்பாடு ஆகியவற்றின் தற்போதைய நிலைப்பாடு-எதிர்காலம், கடல் கடந்து வாழும் தமிழ் இளைஞர்கள் எதிர்நோக்கும் பண்பாட்டுப் பிரச்னைகள் என்ற தலைப்புகளில் கட்டுரைகள் வாசிக்கப்படும்.

இம்மாநாட்டிற்கு கட்டுரைகள் அனுப்ப விரும்புவோர் 2500 சொற்களுக்கு மேற்படாமல் தமது கட்டுரைகளை எழுதி அனுப்புமாறு மேற்படி மாநாட்டு அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

கட்டுரைப் போட்டிக்கான தலைப்பு: தமிழன் என்றொரு இனமுண்டு; தனியே அதற்கொரு பண்புண்டு. புலம் பெயர்ந்தாலும் பண்பாடு மறவோம், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. ஒருத்தனுக்கு ஒருத்தி; இறுதிவரை உறுதி, இளம் தலைமுறையும் இன்பத் தமிழ்ப் பண்பாடும், ஈழத்து வரலாற்று நாயகர்கள்-நாயகிகள், சீதனம், சங்ககாலம் முதல் இன்றுவரை உள்ள காதலர் நிலை

கவிதைப் போட்டியில், மரபுக் கவிதையாயின் 48 அடிகளுக்கும், புதுக் கவிதையாயின் 75 வரிகளுக்கும் மேற்படாது இருக்கவேண்டும் ஒருவர் இரு கவிதைகளை மட்டுமே அனுப்பவேண்டும்.

இரு பிரிவாக நடாத்தப்படும் கவிதைப் போட்டியில் முதற் பிரிவின் தலைப்பு: பண்புடையோர் பற்றுண்டு உலகம், பைந்தமிழர் போற்றும் பண்பு, பண்பெனப்படுவது, ஈழத் தமிழர் இணையில்லா வீரம், பண்பாற்றல், புலம் பெயர்ந்தாலும் புகழ் கெட நடவோம், பாரதி போற்றும் தமிழ்ப் பண்பாடு.

2வது பிரிவு: பார் எங்கள் பண்பாடு காப்பாய், தமிழ் மொழிச் சிறுவர் கல்வி தொடர்பான சிறுவர்களுக்கு உகந்த கவிதைகள்.

இவை அனைத்தும் 31-1-96க்கு முன்னதாக அனுப்பப்பட வேண்டும் சி-ரி


சாவகச்சேரி - நகர்

அருள்மிகு அமிர்தபாஷினி அம்பிகா

சமேத வாரிவன நாதசுவாமி தேவஸ்தானம்

## கேதார கௌரிபூஜை

03-10-95 செவ்வாய் தொடக்கம்

23-10-95 தீபாவளித் திருநாள் வரை

மேற்படி தினங்களில் தினமும் பி.ப 2-30 மணி தொடக்கம் எம்பெருமானுக்கு விசேட சிவபூஜை அபிசேக ஆராதனைகள் நடைபெற்று கேதார கௌரீநாயக திருவீதி உலா வரும் நிகழ்வும் இடம்பெறும்.

கேதார கௌரி விரத அடியார்கள் குறித்த காலத்தில் ஆலயத்திற்கு வருகைதந்து அமிர்தபாஷினி தாயர் உடன் உறை வாரிவன நாதரின் அருளுக்கு பாத்திரமாகும் வண்ணம் வேண்டுகின்றோம்.

குறிப்பு:

கௌரிநூல் பெறும் அடியவர்கள் முன்னதாகவே தங்கள் பெயர் நட்சத்திரங்களை பதிவு செய்து கொள்ளவும்.

நன்றி

இவ்வண்ணம்

இ. கருணாகரன்

(ஆலய தர்மகர்த்தா)

இரா. சச்சிதானந்தசர்மா

(ஆலய ஸ்தானிகளுரு) (சி-1682)



## அறிவித்தல்

### குரக்கன் கொள்வனவு

1995-ம் ஆண்டில் குரக்கன் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் இம்முறையும் பசுமை வேளாண் சேவையால் ஒரு கிலோ தீட்டிய குரக்கன் ரூபா 26/- வீதம் கொள்வனவு செய்யப்படவுள்ளது. குரக்கன் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்களது குரக்கனை பின்வரும் இடங்களில் விற்பனை செய்யலாம்.

வலிகாமம்

பசுமை வேளாண் சேவை — நீர்வேலி
பசுமை வேளாண் சேவை — உடுவில்
பசுமை வேளாண் சேவை — சண்டிலிப்பாய்
பசுமை வேளாண் சேவை — கோண்டாவில்

தென்மராட்சி

பசுமை வேளாண் சேவை — கைதடி
பசுமை வேளாண் சேவை — சாவகச்சேரி
பசுமை வேளாண் சேவை — கொடிகாமம்
பசுமை வேளாண் சேவை — பளை

வடமராட்சி

பசுமை வேளாண் சேவை — பருத்தித்துறை

(ஏ-5335)


# "தலைவர் பிரபா உள்ளவரை எந்தப்படையாலும் எதுவும் செய்ய முடியாது"

(சாவகச்சேரி)

விடுதலைப் புலிகள் அமைப்பும் தலைவர் பிரபாகரனும் உள்ளவரை இனிமேல் எந்தப் படை இங்கு வந்தாலும் எதுவும் செய்ய முடியாது

இவ்வாறு நுணுவில் மணங்குணாய் பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெற்ற தியாகி திலீபனின் 8ம் ஆண்டு இறுதிநாள் நிகழ்வில் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் உரையாற்றுகையில் தெரிவித்தார்

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது: அந்தக் காலத்து அரசியல்வாதிகளைப் போல் இல்லை எமது தலைவர் அவர் தீர்க்கதரிசனம் மிக்கவர் சந்திரிகா அரசு பேச்சுக்கு வருகின்ற பொழுது யுத்தத்துக்கு ஆயத்தம் செய்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். சந்திரிகா அரசு பொருளாதாரத் தடையை நீக்கிய அதே நேரத்தில் மீண்டும் பொருளாதாரத் தடையை விதிக்கும் என்பதும் எங்களுக்குத் தெரியும் நாகர் கோவிலில் அப்பாவிக் குழந்தைகள் மீது குண்டு பொழிந்து சாகடித்த அரசா மக்களைக் காப்பாற்றப் போகின்றது.

புலிகளில் இருந்து மக்களைக் காப்பாற்ற பலாலியில் 50 ஆயிரம் துருப்புக்களை இறக்கியிருப்பதாக அம்மையார் கூறுகின்றார்

தமிழ் மக்கள் பெற்றெடுத்த தலைவனை தமிழ்மக்களால் முன்னெடுத்துச் செல்லப்படுவது

[5ம் பக்கம் பார்க்க]


தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

## ★ ஆர்ப்பாட்ட பேரணி ★

பாடசாலை மாணவர்கள் மீது நடாத்திய குண்டு வீச்சுத்தாக்குதல்களைக் கண்டித்து

இன்று (29-09-1995) வெள்ளிக்கிழமை

காலை 10-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில்

ஆரம்பமாகி நடைபெறவுள்ள வெகுஜனக் கண்டனப் பேரணியில் அனைத்து நிர்வாகிகளும் தங்கள் பகல் நேர வகுப்பு மாணவர்களுடன் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பொதுச் செயலாளர்

[எ-5342] யாழ். மாவட்டம்



## NEW SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக யாழ்ப்பாணம்

SPECIAL ENGLISH COURSE

[விசேட ஆங்கில மொழிக் கற்கை நெறி]

[WEEKEND CLASSES]

[சனி, ஞாயிறு வகுப்புக்கள்]

★ A/L பரீட்சை எடுத்தவர்கள்
★ உயர் கல்வி மாணவர்கள்
★ அரச வங்கி பணியாளர்கள்
★ ஆசிரியர்

ஆகியோருக்குப் பயனுள்ள இலக்கண இலக்கிய மயமான பாடத்திட்டத்திற்கமைவானது

ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம்

ஆரம்பம்: 01-10 1995

SUNDAY 11.00 A.M.

(எ 5344)

### மணிவாக்கு

மிகப் பெரிய உண்மை இது. வலிமைதான் வாழ்வு பலவீனமே மரணம்; வலிமையே மகிழ்ச்சிகரமான வாழ்க்கை, நிரந்தரமான வள வாழ்வு;

- சுவாமி விவேகானந்தர்

# நமது நோக்கு

## இன்றைய பேரணி

பாடசாலைகள் மீதான குண்டுவீச்சு மற்றும் அரசின் இனக்கொலையை கண்டித்து இன்று மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி நடக்கிறது.

இதற்கு முன்னோடியாக நேற்று ஆரம்பப்பள்ளிச் சிறுவர்களின் நாலு பேரணிகள் நல்லூர், யாழ்ப்பாண கல்விக்கோட்டங்களில் இருக்கும் பாடசாலைகளிலிருந்து புறப்பட்டு நாலு பள்ளிக்கூட மைதானங்களில் கூட்டங்கள் நடத்தப்பட்டன;

எந்தவொரு நாட்டினதும் அடித்தளமான சக்தியாக விளங்குவது மாணவ சமூகமே. இவர்கள் தான் எதிர்காலத்தில் நாட்டினைக்கட்டி எழுப்பும் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள். இவ்வாறான மாணவ சமுதாயத்தின் மன எழுச்சியைச் சிதைத்து ஆளுமை அறிவுத்திறனுக்கான வழிகளை மூடி மழுங்கடிப்பதன் மூலம் நீண்டகாலத்தில் நாட்டின் இனத்தின் இயங்கு திறனையே முற்றாக அழித்து விடுவதற்காகத்தான் சிறிலங்கா அரசு தனது தாக்குதல்களை பள்ளிக்கூடங்களையும் மாணவர்களையும் குறிவைத்து நடத்துகிறது.

தமிழ் மக்கள் மீது தற்போது நடைபெற்றுவரும் இன வன்முறைச் சம்பவங்களின் மத்தியிலும் கல்விச் சமூகம் எதிர்கால சந்ததியின் கல்வியில் அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது; ஆனால் அரசு திட்டமிட்டு தமிழ் மக்களின் கல்வியை அழிப்பதற்கு முயல்கிறது. முயலுகிறது. இந்த விடயத்தில் அரசின் அணுகுமுறை பல்வேறு விதமாக முனைப்புகளுடன் செயற்பட்டமையைக் காணலாம். தரப்படுத்தல், பாடத்திட்ட திரிபுகள் மூலமும் வளங்களை தமிழ்ப்பகுதிகளுக்கு அனுப்பாமலும் அரசு செயற்பட்டு வந்தது. ஆனால் இப்போ நேரடியாகவே கல்வி பயிலும் மாணவர்களை அழித்தொழிக்கும் செயலில் அரசு ஈடுபடுகிறது. விடுதலைப் புலிகளின் அரண்களைத் தாக்குகிறோம் என்று பாடசாலைகள் மீது குண்டுகளை வீசி பள்ளிச்சிறுவர்களை கொன்று குவிக்கிறது.

வடமராட்சிப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் வெறிச்சோடிக்கிடக்கின்றன பிள்ளைகள் தங்கள் பாடசாலைகள் மீது குண்டுவீச்சுகள் நடக்குமோ என்றபயத்தால் பள்ளிக்கூடத்துக்கு செல்கிறார்கள் இல்லை. அந்த அளவுக்கு அவர்கள் உளரீதியாகப்பாதிக்கப்பட்டுள்ளார்கள். வலிகாமம் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களின் பள்ளிக்கூடங்கள் வேறு கிராமங்களில் இயங்குகின்றன. மாணவர்களை மாற்றப்பட்ட இடங்களுக்கு வரவழைப்பதில் ஆசிரியர்கள் பெரும் கஷ்டப்படுகிறார்கள். பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுகிறது.

இது பற்றி நாம் சிறிலங்கா அரசிடம் முறைப்படுவதில் ஒருவித நன்மையும் ஏற்படப்போவதில்லை சிங்களப் பேரினவாதம் அது எந்தச் சிங்களக்கட்சியின் ஆட்சியின் போதும் தமிழ்மக்களை அழித்து ஒழிப்பதிலேயே கண்ணும்கருத்துமாக இருக்கும். தனக்கு ஆபத்து வரும் காலங்களில் மாத்திரம் தமிழர்களின் உதவியை நாடும். ஆசை வார்த்தை கூறி வாக்குறுதிகளைக் கொடுத்து ஒப்பந்தங்களைச் செய்யும். பின்னர் தன்னுடைய தேவை முடிந்தவுடன் ஒப்பந்தங்களை கிழித்தெறிந்துவிட்டு மாயாலோக வித்தைகளைச் செய்யும். அவர்களின் ஏமாற்றத்துக்கு பலியும் தமிழர்களும் காலத்துக்குக்காலம் இருந்து வந்திருக்கிறார்கள். இப்பவும் கூட்டணி போன்ற உதிரிகள் எங்கே என்று காத்திருக்கின்றன.

குடா நாட்டில் உள்ள அரச, தனியார் நிறுவனங்களில் தொழில்புரியும் அனைவரும், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் யாவரும் ஒன்றுதிரண்டு பேரணியில் பங்குபற்றி எமது பிரச்னைகளை சர்வதேசத்துக்கு தெரியப்படுத்த வேண்டும்.

மனித உரிமை மீறல் குறித்தும் மனித நேயம் பற்றியும் குரல் கொடுக்கும் சர்வதேசம், சிறிலங்கா அரசு தமிழ் மாணவர் சமூகத்திற்கெதிராக அநியாயமாய், வெறித்தனமாய் செயற்படுவதைக் கண்டிக்க வேண்டும். அதுவுமல்லாமல் சிறிலங்காவின் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு தடைகளை இடவும் வேண்டும். சர்வதேசத் தளத்தில் சிறிலங்கா அரசின் பொய்யான முகமூடி கிழித்தெறியப்படவேண்டும்.

இதில் இன்னொரு விடயம் என்னவென்றால் சிறிலங்கா அரசு எமது வளங்களையும், வாழ்வையும், உயிர்களையும் அழிப்பது மட்டுமல்லாமல், அதை சர்வதேச மட்டத்தில் மறைப்பதற்கும், நியாயப்படுத்துவதற்கும் அதிதீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. செய்தித்தணிக்கை பிரகடனப்படுத்தப்பட்ட சில மணி நேரத்தில் தான் நாகர்கோவில் மாணவர்கள் நரபலி எடுக்கப்பட்டனர். இதைப்பற்றி வெளிஉலகு அரசைக்கேட்டபோது அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்று அரசு மறுத்துவிட்டது. ஆனால் பின்னர் எப்படியோ உண்மை வெளிவந்துவிட்டதால் அரசு இப்போது முழிக்கிறது.

ஆகவேதான் நாங்கள் சிறிலங்கா அரசின் அராஜக நடவடிக்கைகளை உலகுக்கு அம்பலப்படுத்தவேண்டிய நிலையில் இருக்கிறோம். சகல துறை சார்ந்த மக்களும் இன்றைய பேரணியில் பங்குபற்றி எமது அவலங்களை உலகுக்கு எடுத்துக்காட்ட வேண்டும்; அதற்காக நாங்கள் சிறிலங்கா அரசுக்கு மண்டியிடவும் தேவையில்லை. எம்மீது சிங்களப் பேரினவாதம் யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. நாம் போராடித்தான் தீரவேண்டும். போராடி வெற்றியும் பெற வேண்டும்.

# பேரணியில் அணிதிரளுமாறு பொது அமைப்புகள் அழைப்பு

[யாழ்ப்பாணம்]

நாகர் கோவில் பாடசாலை மீது குண்டுத் தாக்குதலை நடாத்தியும் ஏனைய இடங்களில் ஷெல் தாக்குதலை நடாத்தியும் தமிழ் மாணவர்களைக் கொன்ற அரசின் ஈனச் செயலைக் கண்டித்து யாழ். நகரில் இன்று வெள்ளிக்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடாத்தப்படவுள்ளது.

தமிழ் மாணவர்களை மிலேச்சத்தனமான முறையில் சிறிலங்கா அரசு திட்டமிட்டுக் கொன்று குவிப்பதைப் பல பொது அமைப்புக்களும் கண்டித்துள்ளன.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில்; தமிழ் மாணவர்கள் பலியாவதன் உச்சக்கட்டமாக இந்தவாரத்தில் நாகர்கோவில் மகாவித்தியாலய மகளிர் சிறார்கள் கொல்லப்பட்டார்கள். முன்னேறிப்பாய்தல் நடவடிக்கையின்போது பல்கலைக்கழக மாணவி ஒருவர் பலியானார்.

இதுபோன்று மாணவர்கள் கொல்லப்படுவதை வன்மையாகக் கண்டிப்பதாகவும், அரசுக்கு எதிராக இன்று நாம் நடாத்தும் பேரணியில் அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறும் கேட்டுள்ளது.

சிங்கள அரச பயங்கரவாதச் செயல்களை வெளிஉலகம் அறிந்து கொள்ள வழிவகை செய்ய வேண்டும் இதற்கு அனைத்து மக்களும் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொள்ளுமாறு இந்துமத குருபீடாதிபதி கேட்டுள்ளார்.

வெள்ளைச் சீருடையணிந்த இப்பள்ளிச் சிறார்களின் மீது நடாத்தப்பட்ட இப்படுகொலைகளைச் சர்வதேச மாணவர் சமுதாயத்தின் ஊடாக சிறிலங்கா அரசைக் கண்டிக்கவேண்டும் இதற்காக இன்று நடைபெறும் பேரணியில் கலந்து கொள்வதற்காக சிற்றூர்தி சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று சிற்றூர்திகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கல்விக்கும் மாணவர்களுக்கும் ஏற்படும் பாரியபாதிப்பை இக்கண்டனப் பேரணியினூடாக வெளிப்படுத்த இப்பேரணியில் கலந்துகொள்ளுமாறு எழுத்தாளர் ஒன்றியம் அனைத்து எழுத்தாளர்களுக்கும், ஆசிரியர் சங்கம் சகல ஆசிரியர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மற்றும் இப்பேரணியில் சகல சனசமூக நிலையங்களின் உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு மேற்படி சமாசத் தலைவர் டி. ஏ. எம். குணசிங்கம் கேட்டுள்ளார். இவ் உறுப்பினர்களை பதாகைகள் மற்றும் சுலோக அட்டைகளுடன் பேரணியில் கலந்துகொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

சிகை அலங்கரிப்பாளர் சங்கம், விளையாட்டுக் கழகங்கள், மற்றும் அமைப்புகளும் இக்கண்டனப் பேரணியில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

-ர-சி

# "படையினரின் ஷெல் இருக்கும் இடத்தை நாம் கைப்பற்றவேண்டும்"

## கடற்புலிகள் அரசியல்துறை பொறுப்பாளர் இளையவன்

(நாளையடி)

''படையினரின் ஷெல்'' தாக்குதலைக் கட்டுப்படுத்த இரு வழிகள் உண்டு. ஒன்று 'ஷெல்' இருக்குமிடத்தை நாம் கைப்பற்ற வேண்டும். இரண்டு 'ஷெல்' அடிக்கும் இடத்திற்கு திருப்பி நாம் ஷெல் அடித்துக்கொண்டிருக்க வேண்டும் இவ்வாறு கடற்புலிகள் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு இளையவன் தெரிவித்தார்.

நாகர்கோயில் பகுதியில் இடம்பெற்ற தமிழீழ பாதுகாப்புநிதி பரப்புரைகூட்டத்தில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றும் போது கூறியதாவது யாழ்ப்பாணக் குடாநாட்டை சுற்றி யுத்த மேகம் சூழ்ந்துள்ளது எதிரியின் இருப்புக்கரம் எமது குரல்வளையை நசிப்பதற்காக தரையிலும், கடலிலும் நீட்டப்பட்டுள்ளது. தமிழனின் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்ற அரசின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற யுத்தம் இது 12 ஆயிரம் படைகளுடன் யுத்தம் நடத்தி தோல்வி கண்ட அரசு 35 ஆயிரம் படைகளுடன் போர் நடத்தி வெல்ல போவதாக அறைகூவல் விடுத்துள்ளது.

உலகநாடுகளில் பயிற்சி பெற்ற இராணுவத் தளபதிகளின் வழி நடத்தலில் மழைகாலம் ஆரம்பிக்க முன் யுத்தத்தைத் தொடங்குவதற்கான ஆயத்தங்களை அரசு செய்துவருகிறது.

இராணுவத்தின் கைகளில் உலகின் நவீன ரக ஆயுதங்கள் இருக்கின்றன: எம்மிடமே நீங்கள் தந்த நிதி மூலம் வாங்கிய ஆயுதங்களும் இராணுவத்திடம் பறித்தெடுத்த ஆயுதங்களுமே இருக்கின்றன மனிதபலம் எம்மக்களிடம் பெறப்படவேண்டும்.

இந்த யுத்தம் சாதாரண யுத்தமல்ல பலம் பொருந்திய ஒரு யுத்தம் இந்த யுத்தத்தின் வெற்றி, தோல்வி எமது மக்களின் நிலையான வாழ்வைத் தீர்மானிக்கப் போகின்றது தமிழீழத்தை மீட்பதற்கான பாதையில் நாம் நிற்கிறோம் இப்போராட்டத்தின் வெற்றி உங்களின் கைகளிலும் தலைவனின் கைகளிலுமே தங்கியுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் ஆட்பலமும் செயற்பட பொருளாதாரபலமும் வேண்டும்;

163-160-ரி

# யுத்தமுனையிலுள்ள படையினருக்கு தொலைபேசி முன்னுரிமை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு யுத்தமுனைகளில் நிற்கும் இராணுவத்தினருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் தனிப்பட்ட தொலை பேசி வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படும். இவ்வாறு தபால் தொலைத் தொடர்பின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அடுத்தமாதம் முதலாம் திகதியிலிருந்து இத்திட்டம் அமுலுக்கு வரும். இராணுவ உத்தியோகத்தர்கள் உடனடியாக தமது குடும்பத்தாருடன் தொடர்பு கொள்ளுவதற்காக இவ்வசதி செய்து கொடுக்கப்படுகின்றது.

தமது குடும்பத்தாருடன்

(5ம் பக்கம் பார்க்க)

# சைக்கிள் திருட்டு

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை கிழக்கு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் அண்மையில் வழிபடச் சென்ற ஒருவரின் புதிய ஏசியாசைக்கிள் திருட்டுச் போயுள்ளது.

கொழும்புத்துறை கிழக்கு 5ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த கி. கணேஸ் என்பவருடைய சைக்கிளே திருட்டுப் போயுள்ளது.

இத்திருட்டுப்பற்றி இவர் தமிழீழக்காவல் துறையில் முறைப்பாடு செய்துள்ளார்.

154

## வடமராட்சி மீண்டும் சிவந்தது

பொருள் தடைப் பாதிப்பால்
பாதிதின்றும் மறுபாதி தின்னாதும்
கள்ளமற்ற சிறிகள் கால்வீசி
வெள்ளைச் சீருடையில் அன்றும்
பள்ளிக்கு வந்தார்கள்!

ஆட்டம்போடும் மேசைகளை அரக்கி
கூட்டித் துப்பரவு செய்து
நாட்படிப்பை அவர் தொடங்க,
போட்டதே அது!!!

கடகடவென புக்காரா போடவே
உடல்கள் சிதறி... தலைகள் கழன்று
கைவேறாய் கால்வேறாய் கருகி...
குழந்தைத் தசையோ குவிந்து கிடக்க...
சிவந்து கிடந்தன சீருடைத்துண்டுகள்!

அட்டதிக்கும் அதிர்ந்த வெறியில்
கொட்டுண்டு கிடந்தோர் நாற்பதிலதிகம்!
திட்டமிட்ட மனித அழிப்பால்
துடித்தது வடமராட்சி!
இடியை விழுங்கியோர் அடித்துப்புரண்டு
இருந்து பொறுக்கி எடுத்தவற்றை
இணைத்துப் பொருத்தி
இனங்கண்டு...
எடுத்துச் சென்றனர் சுடுகாடு!

இதோ இடியாகித் தமிழீழம்
எழுந்து நிமிர்ந்தது! இனி
கொடியோரின் முடிவு
கடிதில் வரும்!!!

— ந. கிருஷ்ணசிங்கம்

# பனை நடுகையும், நாற்று மேடைத் திட்டமும்

## (கற்பகசோலை)

கற்பகதருவெனப் புகழ்ந்து பேசப்படும் பனைமரம் தமிழீழத்தின் தேசிய மரம் என்று கூறப்படுகின்ற சிறப்புடையது. தமிழீழத்தில் பனைப் பரம்பல் ஏறத்தாழ 60350 ஏக்கரில் 10955 000 ஆகும். ஆனால் பனை பரம்பனை மேலும் மேம்படுத்தும் நோக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப் பகுதி 'கற்பகச்சோலைத் திட்டம்', என்னும் திட்டத்தை நடைமுறைப் படுத்துகிறது. அத்திட்டத்தின் கீழ துரித நடவடிக்கையாக தமிழீழத்தின் பல பகுதி பாகங்களிலும் உகந்த இடங்களைத் தெரிவு செய்து ஆங்காங்கே பனம் பண்ணைகளை அமைத்து வருகின்றது. இரண்டாயிரம் ஆண்டளவிலே தமிழீழமெங்கும் இருகோடி பனைகள் வரை காணப்பட வேண்டும் என்ற இலக்கினை வைத்தே இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளடபடுகிறது. எனவே இப்பனை நடுகைத்திட்டத்தைப் பயன்தரும் வகையிலே முன்னெடுத்துச் செல்வதற்கு ஒரு ஏக்கருக்கான நாற்று மேடைத் திட்டம் அவசியமானதாகும். இதற்கும் பல காரணங்கள் உண்டு.

பனம் விதைகளின் முளைக்கும் திறன் 65 வீதம்ஆகும். எனவே நடப்படும் அத்தனை பனம் விதைகளும் முளைக்கும் என எதிர்பார்க்க முடியாது.

பொதுவாகப் பனம் விதை நடவேண்டும் என்றில்லாமல் குறைந்த, உயரத்தில் பயன் தருமபனையின் விதைகளையும், களித்தன்மை கூடிய, காறல் தன்மை அற்ற பெரிய பனம் பழத்தின் விதைகளையும், கூடிய சாறு சுரக்கும் பனைகளின் விதைகளையும் நாட்டிச் சிறந்த பயன்பெறலாம்.

எனவே விதைத் தெரிவும் நாற்று மேடைத் திட்டமும் பனை நடுகைக்கு மிகவும் இன்றியமையாதனவாகும் நாற்றுமேடைத் திட்டத்தின் மூலம் பெறப்படும் தரமான நாற்றுக்கள் நடுகை செய்வதன் மூலம் பூரணமான பயனைப் பெறக்கூடியதாக இருக்கும்.

மணல் நிலத்திலே பனம் விதைகளை ஐதாக நடுகை செய்து நாற்றுமேடை தயாரிக்க வேண்டும். நாற்று வளர்ந்து பீலிப் பருவம் அடைந்ததும் கிழங்கின் அடியிலுள்ள வேரை நான்கு அங்குலம் வரைவிட்டு வெட்டி விட வேண்டும். பின் இரண்டு வாரங்களுக்கு அந்நிலையிலேயே விட்டு நீரூற்றிப் பராமரித்த பின் அதனை எடுத்துப் பொலித்தீன் பைகளிலே வைத்து மூன்று வருடங்களுக்கு பாதுகாத்து வளர்ந்த பின் உகந்த நிலங்களிலே நடுகை செய்யலாம்

நாற்றுமேடைத் திட்டம் என்பது பனை நடுகையில் மிகமிக அவசியமான ஒரு திட்டமாகும்

பனை நன்கு வளரக்கூடிய பிரதேசங்களில் முறைப்படி பனம் பண்ணைகளை அமைத்தல் மிகவும் பொருத்தமானதாகும் வட தமிழீழத்தில் நாற்று மேடைகள் அமைக்கக் கூடிய மணற்பாங்கான பிரதேசங்கள் காணப்படுவதால், நாற்று மேடைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது மிகவும் எளிதாகும். செம்பியன்பற்று மாமுனையில் அமைந்துள்ள பனம் பண்ணையில் நாற்று மேடைத் திட்டம் நடைமுறைப் படுக்கப்பட்டு, பனம் நாற்றுக்கள் பொலித்தீன் பைகளில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

இனி வரும் ஆண்டுகளில் கற்பகச்சோலைத் திட்டம் மிகவும் பாரிய அளவில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் கற்பகச்சோலை நெறிப்படுத்தற் குழுவினரால் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் ஒழுங்கான பனை நடுகைக்கான நாற்று மேடைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் அமையவிருக்கும் பனம் பண்ணைகள் மிகவும் சிறப்பாக அமைய வாய்ப்பு உண்டு.

ஒழுங்காக முளைப்பதற்கு, பனம்பழம் விழுந்ததிலிருந்து 21 நாட்களுக்குள் நடுகை செய்யப்படவேண்டும் என்பதும், 150 கிராமுக்குக் குறையாத எடையுள்ள பனம்விதைகள் நடுகை செய்யப்படவேண்டும் என்பதும் அனுபவரீதியாக அறியப்பட்டுள்ளது.

நிலத்தினுள்ளே புதைக்கப்படும் விதைகள் முளைகொண்டு வருவதற்கு முன்புகூடப் பல காரணிகளால் அழிந்துவிடலாம். ஆனால் நாற்றுக்கள் ஒழுங்காக நடப்பட்டுப் பாதுகாக்கப்படின், அவை நல்ல முறையிலே வளர்த்தெடுக்கப்படும்.

இரண்டு அல்லது மூன்று பனம்விதைகள் ஒரு குழியிலே நடும்போது, சிலவேளை முழுவதும் முளைகொள்ளும் வாய்ப்பும் உண்டு. இதனால் ஒரு மரத்தை வளரவிடுவதற்கான மேலதிகநாற்றுக்கள் சேதமாக்கப்படவேண்டும். எனவே நாற்றுக்களை நடுவதன் மூலம் இவ்வித சேதங்கள் தவிர்க்கப் படலாம்.

எந்த வகையில் நோக்கினாலும், நாற்று மேடைத் திட்டம் பனை நடுகைக்கு மிகமிகப் பயன் தரக்கூடிய ஒன்றாகும். இதன் மூலம் சந்தேகத்துக்கு இடமின்றி நம்பிக்கையோடு நல்ல இனப் பனைமரங்களை உற்பத்தி செய்யலாம்.

பனம்பழங்களில் ஒரு விதை, இரு விதை, மூன்று விதைப் பனம்பழங்கள் உண்டு. ஒரு விதை ஆண்பனையைத் தரும் இரு விதைகள் உள்ள பழத்தின் ஒரு விதை ஆண்பனையைத் தரும். மூன்று விதைகள் உள்ள பழத்தில் ஒரு விதை மட்டுமே பெண்பனையைத் தரும் என்று அனுபவசாலிகள் கூறுவர். எனவே நாற்றுக்குப் பனம் விதை எடுக்கும்போது, இரு விதைகள் உள்ள பழத்தைத் தெரிவு செய்வது சிறந்தது இதன் மூலம் கூடியளவு பெண்பனைகளை உற்பத்தி செய்யமுடியும்.

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**

# குடாநாட்டு வெள்ள அணைத்தடுப்பு

யாழ். குடாநாட்டில் பரந்தளவில் நூற்றுக்கணக்கான சிறு குளங்கள் காணப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை இயற்கையான தாழ்நிலத்தில் அமைந்துள்ளன. இவற்றின் இலவற்றிலிருந்து ஏற்று நீர்ப்பாசன முறையில் உப உணவுப் பயிர் செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இக்குளங்களில் நீர்வளம் வடகீழ் பருவமழை சூறாவளிப் பருவ மழை மூலம் கிடைப்பதால் இப் பருவ காலங்களைத் தொடரும் சில காலப்பகுதிக்கு இந் நீர்வளம் பயன்படுத்தப்படும். மேலும் குடா நாட்டின் கரையோரங்களும் அண்ணளவாக கடல் மட்டத்துடன் இருப்பதனால் இக் குடா நாட்டின் பெரும் பகுதி வெள்ளத்திற்கும், கடல் நீர் உட்புகுவதற்கும் ஏதுவான பிரதேசமாக அமைந்துள்ளது. ஆகக் கூடிய நிலமட்டம் கடல் மட்டத்திலிருந்து 16 மீற்றர் உயரமாக இருந்தாலும் பெரும்பாலான இடங்கள் கடல் மட்டத்திலிருந்து பதிவாக காணப்படுவதால் இப் பகுதியில் நீர் தேங்கி நிற்பதற்கு சாத்தியம் ஏற்படுகின்றது. இதனாலேயே தொண்டமானாறு கடல் நீர் ஏரி, யாழ் கடல் நீர் ஏரி, உப்பாறு கடல் நீர் ஏரி போன்றன குடா நாட்டின் பெரும்பாலான பகுதிகளை சென்றடையக் கூடியதாக இருக்கின்றன. அதே வேளை உப்பு நீர்த்திவலைகள் காற்றோடு கலந்து செல்வதால் இக்கடல் நீர் ஏரியை அண்டிய பகுதிகளிலுள்ள பயிர்செய்கை நிலங்களில் படிவதனாலும் மாரி காலங்களில் கடல் நீர் வெள்ளத்துடன் சேர்ந்து இப் பகுதியில் தேங்கி நிற்பதாலும் இங்குள்ள மக்களின் விவசாய முயற்சிகள் பாதிப்படையக் கூடியதாக இருக்கின்றன.

மேலும் குடா நாட்டில் கிடைக்கும் மழை வீழ்ச்சியில் வருடத்திற்கு 224000 ஏக்கர் அடி தண்ணீர் நிலத்துக்குள் செல்லாமல் விடுகிறது, இதனால் தரைக்கீழ் நீர் எவ்வளவோ குறைவடைந்து செல்கிறது. இவற்றை விட குடா நாட்டின் ஒரே ஒரு நீரோடையான வழுக்கையாற்றினை குறுக்கே இடப்பட்ட அணைகளின் மூலம் பெறப்படும் நீர் நீர்ப்பாசனத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் இதன் நிரந்தர பராமரிப்புக் குறைபாடுகளாலும் தற்காலிக அணைகள் உடைப்பெடுப்பதனாலும் ஆறுகளின் கரைகள் சேதமடைவதும் மணல் திடல்கள் உண்டாவதும், ஆற்றின்வழி மாறுதலினாலும் அண்டிய விவசாய நிலங்கள் நீர் அரிப்பினால் பாதிக்கப்படுவது அவதானிக்கப்படக் கூடியதாக உள்ளது. இந்த நிலையில் தெல்லிப்பளைப் பகுதியிலிருந்து உற்பத்தியாகி அராலிக் கடலைச் சென்றடையும் இவ்வழுக்கையாற்றை வழிமுறைப்படுத்த வேண்டிய அணைக்கட்டுக்களை அமைத்து இயற்கையாக அமைந்துள்ள இந் நீரோடையை நவீன முறைகளால் வளமானவாய்க்காலாய் மாற்றியமைக்கவேண்டியது அவசியமாகின்றது.

இவ் வழுக்கையாற்றினை புனரமைப்பதன் மூலம் வலிகாமம் மேற்குப் பகுதியில் நெல் உற்பத்தியையும், உணவுப் பயிர் செய்கையினையும் அதிகரிக்க முடியும்.



இவைகளை கருத்திற்கொண்டே குடா நாட்டின் விவசாய அபிவிருத்தியை மென்மேலும் அதிகரிக்கவும் பயிர் செய்கைப் பகுதிகளை வெள்ள அழிவிலிருந்து பாதுகாக்கவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உட்கட்டுமானப் பகுதியினர் துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வெள்ள அணைத்தடுப்புக்களையும், உவர் நீர் தடுப்பு அணைகளையும் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த வகையில் யாழ். கடல் ஏரி ஊடாக நாவற்குழி, அரியாலை, செம்மணி பகுதியிலுள்ள பயிர் செய்கை நிலங்களுக்குச் செல்லும் உவர் நீரைத் தடை செய்யும் நோக்கில் அரியாலைப் பகுதியில் $1\frac{1}{2}$ மைல் நீளமான அணைக்கட்டையும் தொண்டமானாறு கடல் நீர்ஏரி ஊடாக நீர்வேலி கோப்பாய் பகுதியிலுள்ள பயிர் செய்கை நிலங்களுக்கு செல்லும் உவர் நீரை தடை செய்யும் நோக்கில் இப் பகுதியில் இரண்டு மைல் நீளமான அணைக்கட்டையும் அமைத்து வருகின்றனர். எனினும் தீவுப் பகுதிகள், காங்கேசன்துறைப் பகுதி, வடமராட்சிப் பகுதி போன்றவற்றிலும் இவ் அணைகள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன. மேலும் கோப்பாய் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அணைக்கட்டோடு பலகையிலான துரிசு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மழை வீழ்ச்சி காலங்களில் அணைக்கட்டுக்கு உட்பட்ட பகுதிக்கோ அல்லது கடல் நீர் ஏரியை நோக்கிய பகுதிக்கோ வெள்ளம் பெருக்கெடுக்கும் போது இத் துரிசின் பலகை திறந்து விடப்பட்டும் மழைநீரை தேக்க வேண்டிய தேவை ஏற்படுமிடத்து பலகை பூட்டப்பட்டும் விடப்படும்.

மேலும் வருடந்தோறும் மேலதிகமாக 15000 ஏக்கர் அடி தண்ணீர் தரைகீழிருந்து பாவனைக்கு எடுக்கப்படுவதால் குடா நாட்டின் பல பகுதிகளிலும் வெள்ள அணைத் தடுப்புக்களை அமைத்து அதனை சிறு குளங்கள், குட்டைகள் போன்றவற்றில் தேக்குவதன் மூலம் தரைக்கீழ் நீரை குறைவடைய விடாமல் பாதுகாக்க முடியும். இதன் மூலம் உவராக இருந்த கடல் நீர் ஏரியை அண்டிய பிரதேசங்கள் மாற்றமடையக் கூடியதாக இருக்கும். அத்துடன் குடாநாட்டில் தற்போது 93409 ஹெக்ரேயர் நிலத்தில் நெல் விளைவிக்கப்படுகின்றது. எனினும் அடுத்தடுத்த வருடங்களில் இதை விட அதிகமான தஹெக்ரேயர் நிலத்தில் நெல் உற்பத்தியை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. சிறுதானிய உப உணவு பயிர் செய்கையையும் மேட்டு நிலப் பகுதிகளில் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். இந்த நிலையில் நாம் தன்னிறைவான தற்சார்பு பொருண்மியத்தை கட்டியெழுப்ப வேண்டுமானால் விவசாய அபிவிருத்திக்கு அடிப்படை காரணிகளாக இருக்கும் நீர் வளத்தை பாதுகாப்பது அவசியமாகும்.

உழவர் கைகள் உயரட்டும்
உற்பத்திப் பொருட்கள் பெருகட்டும்
உணவுத் தடைகள் உடையட்டும்

# இராசி பலன்

**29-09-1995**

வெள்ளிக்கிழமை

[தமிழுக்கு புரட்டாதி 12]

பஞ்சமி பிற்பகல் 3-29 வரை. அனுஷம் சித்தயோகம் நள்ளிரவு 11-58 வரை. இராகு காலம் காலை 10-32 முதல் 12-02 வரை, சுபவேளை காலை 6-02 முதல் 7-32 வரை.

மேஷம்: மனக்கசப்பான சூழல், விரையச் செலவு, அலைச்சல்.

இடபம்: பெரியவர்களின் ஆதரவு, தாமதவெற்றி, பண வரவு.

மிதுனம்: நண்பர் ஆதரவு, சுப நிகழ்ச்சி, காரியசித்தி.

கடகம்: சிறு வம்பு வருதல், மனப்பயம், தொழில் நஷ்டம்.

சிங்கம்: உல்லாச செலவு, உடல் அசதி, தாயார்கோபம்.

கன்னி: சுமுகமானபோக்கு, கடமை உணர்வு, பயணம்.

துலாம்: முற்கோபம், குடும்ப வேற்றுமை, யோசனை

விருச்சிகம்: நினைத்தது நிறைவேறல், தெய்வீக செலவு, புதிய பதவி.

தனுசு: அமைதிக் குறைவு, ஏளனவார்த்தை. தொழில் பகை.

மகரம்: காரியதடை. இனசனபகை, இடம்பெயர்வு.

கும்பம்: அதிகசிந்தனை, புத்திரர் பெருமை, நற்பணி.

மீனம்: பெண்களால் குழப்பம், கடல்சுமை, துக்க நிகழ்வு.

— ஜோஸ்யர்

# "கல்லூரிப் படிப்பில் நூலகங்களே அறிவுலகமாக விளங்குகின்றன"

## வே. பாலகுமாரன்

(நெல்லியடி)

"இன்று தமிழீழத்தில் நாம் பெரும் நெருக்கடியான கால கட்டத்தில் வாழ்கின்றோம். வசதி படைத்தவர்களுக்கு மட்டும் தான் கல்வி உரியதென எண்ணக் கூடாது. வடபகுதியில் கல்வி நிலாவரைக் கிணறு போல் ஆழம் பதிந்து காணப்படுகின்றது".

இவ்வாறு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி நூலக எரிப்பு வார அனுஷ்டிப்பு தினத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு வே. பாலகுமாரன் குறிப்பிட்டார்.

இவ் வைபவம் பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. டி. ஆர். அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், உலகத்திலெவரும் எம்முடன் நீண்ட காலம் நண்பனாக இருக்கமாட்டார்கள் ஆனால் நூல்கள் மட்டும் எமக்கு நிரந்தரமான நண்பர்கள்.

ஒரு மனிதனது வாழ்வில் பாடசாலைப் பராயம் மிகமுக்கியமானது. பாடசாலை மேடைகளில் முன்னொரு காலம் அதிபர்கள், படித்தவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆங்கில அறிஞர்கள் எமக்குக் கருத்துத் தெரிவித்தனர். இன்று அந்த நிலை மாறிவிட்டது. கல்லூரிப் படிப்பில் அங்குள்ள நூலகங்களே மாணவர்களின் அறிவுலகமாக விளங்குகிறது.

அண்மையில் காங்கேசன் துறைக் கடற்பரப்பில் எடித்தாரா கப்பலைத் தகர்த்த கரும்புலிகள் பெரிய பட்டப் படிப்புப் படிக்கவில்லை. ஸ்ரீலங்கா இராணுவம் அறுபது வருட காலமாகப் படித்து விட்டு செய்யும் நடவடிக்கைகளை எமது போராளிகள் சுமார் ஆறுமாத காலப் படிப்பில் கற்று வெற்றி கண்டு வீர சாதனை படைத்து வருகின்றார்கள்.

கட்டிட அழிப்பு, இன அழிப்பு, கல்வி அழிப்பைச் செய்ய ஸ்ரீலங்கா இராணுவம் முனைகின்றது. தைரியம் எமக்குப் போராட்டம் ஊடாக வந்த பெரிய மாற்றமாகும். எமக்கு வாழ்வில் இடர் ஏற்படும் போது நூல்கள் உறுதுணையாக நிற்கின்றன.

என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார் 160-ரி

# தகவல் வெளியிடும் எல்லையை வரையறை செய்ய புதிய சட்டம்

(கொழும்பு)

தகவல்களை இரகசியமாக வைத்திருப்பதற்கு அரசாங்கத்திற்கு உள்ள உரிமை உட்பட, தகவல்களை வெளியிடும் எல்லையை வரையறை செய்யுமுகமாகவும் புதிய சட்டம் ஒன்றை அரசு கொண்டுவர உள்ளது.

தகவல்களை வெளியிடும் சுதந்திரம் மற்றும் பொது ஆவணங்கள் சம்பந்தமான சட்டத்தை மீளாய்வு செய்வதற்கு, சட்ட ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இந்தத் துறைகளில் சீர்திருத்தங்களைச் சிபார்சு செய்வதே இதன் நோக்கமாகும்.

அரசாங்க அலுவலகங்களில் உள்ள தகவல்களை அறிந்து கொள்வதற்கு மக்களுக்கு உள்ள உரிமை, பொது ஆவணங்கள், சுவடிகள் ஆகியவற்றைப் பார்வையிடும் உரிமை, சில தகவல்களை இரகசியமாக வைத்திருப்பதற்கு அரசாங்கத்திற்கு உள்ள உரிமை உட்பட, அது தொடர்பான வரையறைகள் ஆகியன பற்றிச் சட்ட ஆணைக்குழு கவனம் செலுத்தும்.

தேவையான திருத்தங்களைச் செய்யும் நோக்கத்துடன், தகவல் சுதந்திரம் சம்பந்தமான சட்டத்தைப் பரிசீலனை செய்ய இருப்பதாக ஆணைக் குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பெருந் தொகையான தனி நபர்களும், குழுவினரும் பல்வேறு கருத்துக்களை முன் வைத்துள்ளனர். பொதுமக்கள் மற்றும் உள்ளூராட்சி, அரசாங்க நிறுவனங்களின் பிரதிநிதிகளின் கருத்துக்களையும் அறிந்துகொள்ள ஆணைக்குழு தீர்மானித்திருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறினார். கே-சி

# வேலையில்லாப் பிரச்னை அதிகரிப்பு விரக்தியுறும் நிலையில் இளைஞர்கள்

[கொழும்பு]

சிறிலங்காவில் வேலையில்லா பிரச்னை மிக மோசமான நிலையையடைந்து வருவதால், இளைஞர் சமூகம் விரக்தியுறும் நிலைக்கு தள்ளப்பட்டு வருவதாக பொருளாதார நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்,

யுத்த செலவுகள் அதிகரித்து வருவதால் அரச துறைகளில் தொழில்வாய்ப்பு ஏற்படுத்தப்படுவது குன்றி விட்டது.

1980களில் வேலையில்லா பிரச்னை அதிகரித்து வந்து, 1983ல் இனப்பிரச்னை அதிகரித்ததும் பிரச்னை மேலும் மோசமடைந்தது.

1990களிலும் அதன் பிற்பாடும் வேலையற்ற இளைஞர்கள் தொழில் வாய்ப்பின்றி விரக்தியுற்ற நிலையில் காணப்படுகின்றனர். 1993ல் வேலையற்றோர் விகிதம் 11.2 ஆக இருந்தது. கடந்த வருடம் அது 14 சதவீதமாக அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. கே-ரி

## திருவிழா

(அரியாலை)

யாழ். கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்திருவிழா கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6-30 மணிக்கு திருவிழா கூட்டுத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து திருச் சொரூப பவனியும் இடம்பெறவுள்ளது. -59

# "மனிதாபிமானமற்ற தாக்குதலை அரசு நிறுத்தவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"யாழ். குடா நாட்டில் சிறிலங்கா அரசு கண் மூடித்தனமாக ஷெல் வீச்சு நடாத்துவதையும் விமானக்குண்டு வீச்சு நடாத்துவதையும் யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

அண்மையில் நாகர் கோவில் மகா வித்தியாலயத்தில் விமானக்குண்டு வீச்சு 40க்கும் மேற்பட்ட பச்சிளம் பள்ளிச் சிறார்கள் படுகொலை செய்யப்பட்டு மேலும் பலர் படுகாயமுற்ற மனிதாபிமானமற்ற செயலை வன்மையாகக் கண்டிப்பதுடன் உடனடியாக ஷெல் வீச்சுக்களையும் விமானத்தாக்குதலையும் நிறுத்துமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்கின்றது.

சிறிலங்கா அரசு மேற்கொண்டுவரும் இனப்படுகொலையை கண்டித்து இன்று வெள்ளிக்கிழமை நடாத்தப்படும் ஆர்ப்பாட்ட பேரணியில் சகல விளையாட்டுக் கழகங்களையும், விளையாட்டு துறை சார்ந்த சங்கங்களையும் தங்கள் கழக, சங்க பதாகைகளுடனும், சுலோக அட்டைகளுடனும் கலந்து கொண்டு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றது. - சி

# பச்சைக் கயிற்றினாலேயே மர்மக்கொலைகள் நடந்தன

(கொழும்பு)

கொழும்பிலும், வெளி இடங்களிலும் அண்மைக் காலங்களில் நடைபெற்ற மர்மக் கொலைகளுக்கு பச்சை நிறக் கயிறுகளையே கொலையாளிகள் பாவித்ததாக தற்போது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

ஐ.தே. கட்சியின் ஆட்சியில் இந்த பச்சைக் கயிறுகள் இஸ்ரேலில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு விசேட அதிரடிப்படை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இக்கயிறுகளை மையமாகக் கொண்டே பல கொலைகள் நடைபெற்றதாக மேற்படி கொலைகள் சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள பல அதிரடிப் பொலிஸாரின் வாக்கு மூலங்களிலிருந்து தெரிய வந்துள்ளன. வி-ரி

## வட-கிழக்கில்

(1ம் பக்க தொடர்ச்சி)

களை ஏற்க மறுத்துள்ளனர்.

தங்களுக்கு வடக்கு கிழக்கிற்கு வெளியே எந்த இடத்திலாவது நியமனம் வழங்குமாறும் வட-கிழக்கிற்கு செல்ல முடியாதெனவும் இவர்கள் சுகாதார அமைச்சுக்கு கூறியுள்ளனர்.

இதனால் வட-கிழக்கு ஆஸ்பத்திரிகளில் நிலவும் டாக்டர்கள் பற்றாக் குறையை போக்குவதில் சுகாதார அமைச்சு பெரும் பிரச்னைகளை எதிர் நோக்கியுள்ளது. சி

## தலைவர் பிரபா

(2ம் பக்க தொடர்ச்சி)

இந்தப்போராட்டம் போராடுகின்ற கருவிகள், உதவிகள் கூட தமிழ் மக்களுடையது நாங்கள் வேறுயாரையும் நம்பி இருக்கவில்லை நாங்கள் சொந்தக்காலில் நின்றே போராடுகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். 155-ரி

## யுத்த முனையில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எவ்விததொடர்புமின்றி வட-கிழக்கு யுத்தமுனைகளில் இராணுவத்தினர் நிற்கின்றனர். எனவே அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து தனிப்பட்ட தொலை பேசிகளுக்காக விண்ணப்பிப்பவர்களில் இவ் யுத்த முனைகளில் நிற்பவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் என அப்பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். ர

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995—09—29

வெள்ளி இரவு

8-20 கலைமஞ்சரி
1. அறிமுகம் 'உலராத மண்' கவிதைத் தொகுதி
2. சிறுகதை- க. சிவராசா எழுதிய "அவள்"
3 கவிதை- தமிழ்க்கவி எழுதிய "கல்லறை"
8-25 கணப்பொழுது- சி. கண்ணம்மா எழுதிய வீரவேங்கை பகீன் | செல்வம்'
8-30 செய்திகள்
8-40 அரசியல் அரங்கம் வே பாலகுமாரன் எழுதிய 'வினை காலமும் விபரீத புத்தியும்'
8-50 ஏர்முனை நிகழ்ச்சியில் "அன்றுசிச் செய்கை" உரைச்சித்திரம்

1995—09—30

சனி காலை

7-02 மாவீரவணக்கம்
7-15 நீங்கள் கேட்டவை
7 30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
8-00 மணிவரை நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழவானொலி நிகழ்ச்சி நிரல்

1995—09—29

வெள்ளி மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சிகீதம்
5-10 புதியவை
5-15 கனநேரக் காவியங்கள்
5 30 மண்ணின் குரல்
5 40 நேயர் கடிதங்கள்
5-45 நாடகம்
6-00 சிந்தனைக்குச் சில வினாடிகள்
6-02 வெற்றிச் சுவடுகள்
6-10 செய்திகள்
6-15 விளையாட்டுச் செய்திகள் அதனைத் தொடர்ந்து
6-30 மணிவரை என் தெரிவு

## அம்பாறையில்

[1ம் பக்க தொடர்ச்சி]

இத் தாக்குதலின் போது றிப்பீற்றர் துப்பாக்கி -01, ஷொட்கன் - 03, கத்தி-01, லைற் - 4, தோட்டா - 22, ஆகிய இராணுவ உபகரணங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. க-சி

## இராணுவ செய்தி

(1ம பக்க தொடர்ச்சி)

வெளிநாட்டு செய்தி நிறுவனங்களுக்கான தணிக்கை முறை ஏற்கனவே நீக்கப்பட்டதும் தெரிந்ததே.

இதேவேளையில் அரசாங்கத்தின் தற்போதைய தணிக்கை முறையை உடனடியாக நீக்கி விடுமாறும் இத் தணிக்கை முறை சர்வாதிகாரத்திற்கு வழிவகுத்துவிடுமென சுதந்திர பத்திரிகையாளர் இயக்கம் அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. க சி

## விமானம் மூலம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுரா பண்டாரநாயக்கா இந்நிகழ்வில் சமூகமளிக்கவில்லை.

மாலை 3-55 மணியளவில் அநுரா பண்டாரநாயக்கா ஹொரகொல்லைக்கு வந்து பண்டாரநாயக்கா நினைவுத் தூபிக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினாராம்.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இப்படி வெவ்வேறு நேரங்களில் அஞ்சலிகள் செலுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. ம-சி

## பேரணி

(1ம் பக்க தொடர்ச்சி)

கூட்டுத்தாபன உள்ளூராட்சி ஊழியர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்கள், ஏனைய பொது மக்கள் அமைப்புக்கள்,

மக்கள் நான்கு பேர் கொண்ட வரிசையிலும், சைக்கிளுடன் வருபவர்கள் இரண்டு பேர் வரிசையிலும் அணிவகுத்து வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

### வாகனங்களின் ஆரம்ப தரிப்பிடம்

வலிகாமம் கோட்டம்: நாச்சிமார் கோவிலடி கே. கே எஸ். வீதி.

வடமராட்சி கோட்டம்; தொழில் நுட்பக் கல்லூரி மைதானம்;

தென்மராட்சி தீவகம்: கலட்டி சந்தியிலிருந்து யாழ் நோக்கிய பிறவுண் வீதி

### வாகனங்கள் முடிவிட தரிப்பிடம்

வலிகாமம் கோட்டம் பழைய பூங்கா வீதி சென் ஜோன்ஸ் கல்லூரி.

வடமராட்சி கோட்டம்: கச்சேரி நல்லூர் வீதி.

தென்மராட்சி கோட்டம் கச்சேரி கண்டி வீதி.

தீவகம் கோட்டம்; சோமசுந்தரம் அவனியூ, சி

## 9வது ஆண்டு நிறைவு விழா

[அரியாலை]

யாழ் இராசாவின் தோட்டம் அருள் மாதா ஆலய ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழா எதிர் வரும் 7ந் திகதி சனிக்கிழமை நடைபெறுமென தெரிய வருகின்றது. 59

## அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

நவாலி சென் பீற்றேஸ் தேவாலயப்பகுதியில் இடம் பெற்ற புக்காரா விமானத் தாக்குதலின் போது உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு வழங்குமாறு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி அம்மன் கோவில் பரிபாலன சபையின் தலைவி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பத்து ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். -154



அரச படைகளின் தாக்குதலை கண்டித்து பள்ளிச் சிறுர்கள் நேற்று நடாத்திய கண்டனப் பேரணியின் போது யாழ். பொஸ்கோ பாடசாலை முன் சிறுர்கள் கூடியிருப்பதையும் பேரணியின் பின் நடந்த கூட்டத்தில் மாணவி ஒருவர் உரை யாற்றுவதையும் படத்தில் காணலாம். படங்கள்: 'தேவா'

### சர்வஜன வாக்கெடுப்பில்

# தீர்வு யோசனை நிராகரிக்கப்பட்டால் மக்கள் விருப்பப்படி அரசு நடக்கும்

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வுதொடர்பாக அரசு முன்வைத்துள்ள தீர்வுத் திட்டம் சர்வஜன வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்டால் மக்களின் விருப்பத்திற்கு மாறாக அரசு செயற்பட மாட்டாதென அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற சட்டத்தரணிகள் மாநாட்டிலேயே இதனை தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில்:

தற்போது கட்சிகளினதும், மக்களினதும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தத் தீர்வுத் திட்டம் விரைவில் நாடாளுமன்ற தெரிவுக்குழு விடமும் அதன் பின் மக்களிடமும் சர்வஜன வாக்கெடுப்பிற்கு விடப்படும்.

இந்த வாக்கெடுப்பின் போது மக்கள் தீர்வு யோசனையை நிராகரித்தால் அவர்களது விருப்பப்படியே அரசு நடந்து கொள்ளும். மக்களின் விருப்பத்தை மறுக்கமாட்டாது. மக்கள் விருப்பம் எதுவோ அதன்படியே அரசும் செயற்படும் என்றார். -சி

# ஆழ்வார் கோயில் உற்சவ பாதுகாப்பு பாதுகாப்பு அமைச்சு மௌனம்

(யாழ்ப்பாணம்)

வல்லிபுர ஆழ்வார் கோவில் வருடாந்த உற்சவத்திற்கான பாதுகாப்பு குறித்து இதுவரை பாதுகாப்பு அமைச்சு எதுவித பதிலும் கூறவில்லை.

கடந்த 23ம் திகதி ஆரம்பமான வல்லிபுர ஆழ்வார் கோவில் உற்சவம் அடுத்த மாதம் 3ம் திகதி வரை நடைபெறவுள்ளது. இக்காலப்பகுதியில் அசம்பாவிதம் எதுவுமின்றி உற்சவம் நடைபெறுவதற்கு பாதுகாப்பு அமைச்சிடம் கோயில் நிர்வாகம் அனுமதி கோரியிருந்தது.

எனினும் இவ்விடயம் உயர் அதிகாரிகளினாலேயே தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதால் அவர்களிடம் இவ்விடயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களின் முடிவு பற்றி காலக் கிரமத்தில் அறிவிக்கப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமையகம் அறிவித்துள்ளதாக யாழ். மேலதிக அரச அதிபர் தெரிவித்துள்ளார். -சி

# படையினர் - புலிகள் பல இடங்களில் மோதல்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் பாதுகாப்புப்படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நேற்று பல பகுதிகளில் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்கா தெரிவித்தார்.

திருமலை குச்சவெளிப்பகுதியில் இரு பகுதியினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றபோதிலும் சேதவிபரங்கள் பற்றி அறிவிக்கப்படவில்லை.

மன்னார் புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் காயமடைந்தார். இச்சம்பவத்தில் பொதுமகன் ஒருவரும் காயமடைந்தாராம். க-சி

# உள்ளூர் விமான சேவைக்கு தொடர்ந்தும் தடை

(கொழும்பு)

உள்ளூர் விமான சேவைகளின் தடை மேலும் நீடிக்கப்பட்டுள்ளதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 14ம் திகதி உள்ளூர் விமான சேவைகளுக்கு தடைவிதித்த அரசாங்கம், டிசம்பர் மாதம் 25ம்திகதிவரை இதனை நீடித்துள்ளதாக விமான சேவைகள் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் கொழும்பு நகரில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை விமானங்களை கடத்தி தாக்கலாமென்ற காரணத்தாலே அரசாங்கம் உள்ளூர் விமான சேவைகளை நிறுத்தி வைத்துள்ளதாம். ம-சி

# சட்டத்தின் திறவுகோல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ நீதிநிர்வாகத்துறையினரால் வெளியீடு செய்யப்படும் ''சட்டத்தின் திறவுகோல்' என்னும் சஞ்சிகை வெளிவந்துள்ளது.

இதில் தேசியத் தலைவரின் உரையிலிருந்து, சீதனம் ஒரு சமூகச்சிறுமை, மூகாமையில் தலைமைத்துவத்தின் முக்கியத்துவம், குடும்ப ஆலோசனை சபை, கோரக்காட்சி, தமிழீழ நீதிமன்றின் குற்றவியல் வழக்கு எப்படி நடைபெறுகின்றது. குற்றத்தண்டனை அன்றும் இன்றும். நீதி செலுத்துகையில் முதன்மை வகிக்கும் நடுவுநிலைமை, முறைமை பிறழா நீதி ஆகிய கட்டுரைகளும் மற்றும் கேள்வி, பதில் கவிதைகள் ஆகிய சிறப்பு அம்சங்களுடன் வெளிவந்துள்ளது. -சி

# வரதராஜப் பெருமாள் நாடு திரும்புவார்

(கொழும்பு)

வட-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் திரு வரதராஜ பெருமாள்மிகவிரைவில் நாடு திரும்பவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் இந்தியப்படையினரின் பலத்த பாதுகாப்பில் இருக்கும் வரதராஜப்பெருமாள் விரைவில் இலங்கை திரும்பி தீவிர அரசியலில் ஈடுபடவுள்ளதாக ஈ பி ஆர் எல். எவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஈ. பி ஆர். எல். எவ் தெரிவித்த யோசனையில், சிங்களக் குடியேற்றங்களை அகற்றுதல்: கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளை தீர்த்தல், நாடாளுமன்றத்தில் 2-வது சபை, உப-ஜனாதிபதியாக சிறுபான்மை இனத்தவர்களை நியமித்தல் என்பன குறிப்பிடப்பட்டுள்ளது. -சி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618.

# தேசிய பாதுகாப்பு நிதி செலுத்தும் இடங்கள்

(யாழ்ப்பாணம்)

சங்கானை, சண்டிலிப்பாய் வட்டத்தைச் சேர்ந்த பின்வரும் கிராம சேவகர் பிரிவுகளில் தேசிய பாதுகாப்பு நிதியினை பெற்றுக் கொள்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. இவ்விரு வட்டங்களிலும் இதுவரை கலந்துகொள்ளாத மக்களை இதில் கலந்து கொள்ளுமாறு நிதிப்பிரிவினர் கேட்டுள்ளனர்.

சங்கானை வட்டத்தில் அராலிவடக்கு. அராலி மத்தி, அராலி தெற்கு, அராலி மேற்கு, அராலி கிழக்கு, வட்டு தெற்கு, வட்டு தென் மேற்கு, சங்கரத்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் வட்டு யாழ்ப்பாணக் கல்லூரியில் நாளை சனி கிழமை காலை 8-30 மணி முதல் மாலை 5-00 மணி வரை செலுத்தலாம்.

# இன்று கடையடைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் அப்பாவி தமிழ் மாணவர்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் தொடர்ந்து நடத்தி வரும் குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதல்மூலம் நடத்தும் படுகொலைகளை கண்டிக்கும் வகையில் இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் இருந்து காலை 10-00 மணிக்கு ஆரம்பமாகும்பேரணியில் கலந்து கொள்ளும் முகமாக யாழ். நகர் வணிக நிலையங்கள் மூடப்பட்டிருக்குமென யாழ் வணிகர் கழகம் தெரிவிக்கிறது. -சி

# இன்றைய கிரிக்கெட்

[இஸ்லாமாபாத்]

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்குமிடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி இன்று பாகிஸ்தான் குஜரன்வாலாவில்நடைபெறவுள்ளது.

மேற்படி இரு அணிகளுக்குமிடையில் மொத்தம் மூன்று ஒருநாள் போட்டி நடைபெறவிருக்கின்றது.

பாகிஸ்தானுக்கும் - இலங்கைக்குமிடையில் நடைபெற்று முடிந்த மூன்றுடெஸ்ட்தொடரில் இலங்கை அணி வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. வி-சி

## கல்விக் கூடங்கள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாபெரும் பேரணியில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்பேரணி இன்று காலை 10 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கலைப்பீடமைதானத்திலிருந்து ஆரம்பமாகும். பேரணி புறப்பட்டு இராமநாதன்வீதி பலாலி வீதி அரசடி வீதி கோவில் வீதி வழியாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச் சென்றடையும்.

இங்கு வைத்து சர்வதேச செஞ்சிலுவைச்சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதியிடம் கண்டன மகஜர் ஒன்று வெகுஜன அமைப்புக்கள் ஒன்றியத்தால் கையளிக்கப்படும்.

இதனைத் தொடர்ந்து கோவில்வீதி, ஆஸ்பத்திரிவீதி, கண்டி வீதி வழியாக யாழ் மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்து அங்குபொதுக் கூட்டம் நடைபெறும். இதன்பின் இங்கு வைத்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கு விலாசமிடப்பட்ட மகஜர் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினரால் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்படும்.

கல்வி அமைச்சருக்கான மகஜர் கல்விப் பணிப்பாளரிடமும் மற்றும் மகஜரின் பிரதிகள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய வதிவிடப் பிரதிநிதி. சகல வெளிநாட்டுத் தூதராலயங்கள், எதிர்க்கட்சித் தலைவர், சிறுவர் பாதுகாப்பு நிதியம், யாழ் வதிவிடப் பிரதிநிதி, ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படும்.

170 .162.157.சி

## பள்ளிச் சிறுர்கள்

(1ம் பக்க தொடர்ச்சி)

மணிக்கு அவ்வப் பகுதி பாடசாலைகளில் இருந்து ஆரம்பமாகியது.

ஸ்ரீலங்கா அரசும் அரச படைகளும் தமிழ் மாணவர்கள் மீது மேற்கொண்டு வரும் பயங்கரவாத நடவடிக்கை -யை கண்டித்து அதாவது கடந்த 22ஆம் திகதி நாகர் கோவில் மகாவித்தியாலயம் மீது மேற்கொண்ட தாக்குதலை கண்டித்துமே ஆரம்ப பாடசாலை மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்ட பேரணியை நடாத்தினுர்கள்.

### யாழ் கோட்டத்தில்

யாழ் கோட்டத்தை சேர்ந்த ஆரம்ப பாடசாலை சிறுர்கள் ஊர்வலமாக பிரதான வீதி கோவில் வீதியூடாக யாழ் ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தை சென்றடைந்தனர்.

அங்கு விசேட பொதுக் கூட்டமும் நாகர் கோவில் வித்தியாலயத்தில் கொல்லப்பட்ட மாணவர்களை நினைவு கூறும் அஞ்சலி நிகழ்வுகளும் இடம் பெற்றன. 170-162-சி

### வண்ணர் பண்ணையில்

வண்ணர் பண்ணை பகுதியை சேர்ந்த ஆரம்ப பாடசாலை மாணவர்கள் தத்தம் பாடசாலைகளில்இருந்து ஊர்வலமாக புறப்பட்டு கே. கே. எஸ் வீதி பலாலி வீதி அரசடி வீதியூடாக யாழ் இந்து மகளிர் கல்லூரியை சென்றடைந்தனர். அங்கும் விசேடபொதுக் கூட்டமும் மாணவர்களின் உரைகளும் இடம்பெற்றன.

### நல்லூர் கோட்டத்தில்

அரியாலை பகுதியை சேர்ந்த ஆரம்ப பாடசாலை மாணவர்கள் தத்தம் பாடசாலைகளில் இருந்து ஊர்வலமாக புறப்பட்டு முத்திரைச் சந்தியை வந்தடைந்தனர். அங்கிருந்து கச்சேரி நல்லூர் வீதி நாவலர் வீதியூடாக யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தை சென்றடைந்தனர். அங்கும் விசேட பொதுக் கூட்டம் இடம் பெற்றது.

### கொக்குவிலில்

கொக்குவில். கோண்டாவில் பகுதிகளை சேர்ந்த பாடசாலை மாணவர்கள் தத்தம் பாடசாலைகளில் இருந்து ஊர்வலமாக புறப்பட்டு தாவடி சந்தியை வந்தடைந்தனர். அங்கிருந்து கே. கே. எஸ் வீதியூடாக கொக்குவில் இந்துக் கல்லூரியை வந்தடைந்தனர். அங்கு விசேடபொதுக் கூட்டமும், தாக்குதலில் உயிரிழந்த மாணவர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகளும் இடம் பெற்றன

நேற்று நகரில் நடைபெற்ற ஆரம்ப பாடசாலை சிறுர்களின் இந்த பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான பள்ளி சிறுர்கள் கலந்து கொண்டனர்.

உச்சி வெய்யிலையும்பொருட்படுத்தாது மாணவ சிறுர்கள் அரசு மேற்கொள்ளும் அட்டூழியங்களை கண்டித்து பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட சுலோக அட்டைகளை கையில் எடுத்து சென்றதுடன் கோஷங்களையும் எழுப்பியவாறு சென்றனர். 170-சி